மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு நல்ல முடிவை எதிர்பார்க்கிறார்கள். நிச்சயமாக ஒரு நல்ல முடிவைத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரைவிலே எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கி கிறேன். அதேபோல, சென்னையைப் பொறுத்தவரை, 16 மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங் களின் கடன் நிவாரணம் ரூ. 19,32,365.30 காசு ஆகும். அது தேவையென மத்திய கூட்டுறவு வங்கியும், சென்னை மண்டல மீன்துறை உதவி இயக்குநர், ரூ. 25,68,747.11 காசு கடன் நிவாரணம் தேவையெனவும், ஆக மொத்தம் ரூ. 45,01,112.41 தேவை எனக் கோரியுள்ளார். பொதுவாக, மீனவர்கள் வாங்கிய கடன்கள் என்று குறிப்பிடும் போது, மீனவர்கள் வாங்கிய வலை, இயந்திர சாதனங்கள், விசைப் படகுகள் பெறுவதற்காகப் பெற்ற கடன்கள் இதில் அடங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

407—

சிவகிரியில் அரசு நூற்பாலை.

*3362 திருமதி கவி நிலவு தர்மராஜ்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா? :

நெசவாளர்களை அதிகம் கொண்ட மொடக்குறிச்சி தொகுதி சிவகிரியில் ஓர் அரசு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகிரியில் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்ததால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. கவன ஈர்ப்பு

(அ) கரூர் வட்டம், பள்ளப்பட்டி மருத்துவமனையில் முதுகலைப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் இல்லாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.